ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**12 | T | I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2014 දෙසැම්බර්
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2014 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2014**

ශෛවනෙරි I, II
**சைவநெறி I, II**
Saivaneri I, II

පැය තුනයි
**மூன்று மணித்தியாலம்**
*Three hours*

## சைவநெறி I

**கவனிக்க :**
(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் பிறபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

1. "வெள்ளை எருதேறும் விரிசடையோன் பெற்றெடுத்த பிள்ளையார்" எனும் வரி இடம்பெற்றுள்ள நூல்,
(1) விநாயகர் அகவல் (2) விநாயக புராணம் (3) பிள்ளையார் கதை (4) கணேசபஞ்சரத்தினம்

2. திருக்கோவையாரைப் பாடியவர்,
(1) திருமூலர் (2) அருணகிரிநாதர்
(3) மாணிக்கவாசகர் (4) திருநாவுக்கரசர்

3. சைவநெறியில் யோகமார்க்கத்தைக் கடைப்பிடிப்போர் அடையும் முத்தி,
(1) சாலோகம் (2) சாமீபம்
(3) சாயுச்சியம் (4) சாரூபம்

4. இறைவன் இறைவியைத் திருமணம் செய்த நாளாகப் போற்றப்படும் நாள்,
(1) பங்குனித் திங்கள் (2) பங்குனி உத்தரம்
(3) மார்கழித் திருவாதிரை (4) மாசி மகம்

5. சித்திரைப் புத்தாண்டில் சூரியன் பிரவேசிக்கும் இராசி,
(1) சிங்கராசி (2) மகரராசி
(3) இடபராசி (4) மேடராசி

6. இலங்கையில் தோன்றிய விரத மகிமை கூறும் இலக்கியம்,
(1) சிவராத்திரி புராணம் (2) கந்தபுராணம்
(3) திருவிளையாடற் புராணம் (4) திருக்கரசைப்புராணம்

7. நம்பியாண்டார் நம்பி அருளிய நூல்,
(1) திருத்தொண்டத்தொகை (2) திருத்தொண்டர் திருவந்தாதி
(3) கோயில்நான்மணிமாலை (4) திருமுருகாற்றுப்படை

8. தரிசிக்க முத்திதரும் சிவத்தலம்,
(1) திருவாரூர் (2) காசி
(3) சிதம்பரம் (4) திருவண்ணாமலை

9. மெய்கண்டதேவர் வாழ்ந்த காலம்,
(1) கி.பி. 10ஆம் நூற்றாண்டு (2) கி.பி. 11ஆம் நூற்றாண்டு
(3) கி.பி. 12ஆம் நூற்றாண்டு (4) கி.பி. 13ஆம் நூற்றாண்டு

[பக். 2 ஐப் பார்க்க

10. “பட்டகட்டையில் பகற்குருடு போகின்றது” என்று கூறியவர்,
(1) உமாபதி சிவாசாரியார் (2) மறைஞானசம்பந்தர்
(3) குருஞானசம்பந்தர் (4) திருஞானசம்பந்தர்

11. “கடமையிற் தவறினால் கடவுளைக் காணமாட்டாய்” என்று கூறியவர்,
(1) சித்தானைக்குட்டி சுவாமிகள் (2) யோகர் சுவாமிகள்
(3) முத்துலிங்க சுவாமிகள் (4) பெரியானைக்குட்டி சுவாமிகள்

12. குமரகுருபரருக்கு பேசும் ஆற்றல் கிடைத்த திருத்தலம்,
(1) திருப்பெருந்துறை (2) திருத்தணிகை
(3) திருவேரகம் (4) திருச்செந்தூர்

13. 19ஆம் நூற்றாண்டில் ‘இலங்கையில் சைவ மறுமலர்ச்சியின் தந்தை’ என்று அழைக்கப்பட்டவர்,
(1) சி. வை. தாமோதரம்பிள்ளை (2) காசிவாசி செந்தில்நாதையர்
(3) சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரனார் (4) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

14. கடவுளுக்கு, சொரூபம், தடத்தம் என இரு இலக்கணங்களைக் குறிப்பிடுவது,
(1) வேதாந்தம் (2) சைவசித்தாந்தம்
(3) விசிட்டாத்வைதம் (4) வீரசைவம்

15. சைவசித்தாந்த நோக்கில் மும்மலங்களால் பீடிக்கப்பெற்ற ஆன்மாக்கள் எனப்படுவோர்,
(1) சகலர் (2) பிரளயாகலர்
(3) விஞ்ஞானகலர் (4) சிவன்முத்தர்கள்

16. எமது கண்கண்ட தெய்வங்கள் எனப்படுவோர்,
(1) உற்றார், உறவினர் (2) மாதா, பிதா
(3) நண்பர், அயலவர் (4) விருந்தினர், குரு

17. சிவலிங்க பூசை செய்வதற்கான தகுதியளிப்பது,
(1) விசேட தீட்சை (2) நிர்வாண தீட்சை
(3) சமய தீட்சை (4) ஆசாரிய அபிடேகம்

18. சிவ என்ற பெயரைக் குறிப்பிடும் இலங்கையிலுள்ள மிகப் புராதனமான சான்றுகள்
(1) பிராமி சாசனங்கள் (2) சோழரின் கல்வெட்டுகள்
(3) வணிக கணங்களின் சாசனங்கள் (4) கோட்டே காலக் கல்வெட்டுகள்

19. கடல் நீரில் விளக்கேற்றி வழிபாடு நிகழ்த்தப்படும் அம்மன் ஆலயம்,
(1) காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயம் (2) வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம்
(3) பட்டிநகர் கண்ணகை அம்மன் ஆலயம் (4) சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலயம்

20. சோழப்பெருமன்னர் காலத்தில் இலங்கையில் ‘மச்சேஸ்வரம்’ என அழைக்கப்பட்ட திருத்தலம்,
(1) திருக்கேதீச்சரம் (2) தான்தோன்றீச்சரம்
(3) திருக்கோணேச்சரம் (4) வானவன்மாதேவீச்சரம்

21. சேரமான்பெருமாள் நாயனார் பாடிய பாடல்கள் இடம்பெறும் திருமுறை,
(1) 5ஆம் திருமுறை (2) 8ஆம் திருமுறை (3) 11ஆம் திருமுறை (4) 12ஆம் திருமுறை

22. இருபதாம் நூற்றாண்டில் மட்டக்களப்பில் சமய, சமூகப்பணிகளைச் செய்தவர்,
(1) சித்தானைக்குட்டி சுவாமிகள் (2) முத்துலிங்க சுவாமிகள்
(3) சுவாமி விபுலாநந்தர் (4) கடையிற் சுவாமிகள்

23. கொழும்பில் அமைந்துள்ள பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தின் தலவிருட்சம்,
(1) வில்வமரம் (2) மாமரம்
(3) மாதுளை மரம் (4) பலா மரம்

[பக். 3 ஐப் பார்க்க

24. மட்டக்களப்பில் ஆடி அமாவாசைத் தீர்த்த தின விசேடம் அமைந்த திருத்தலம்,
(1) திருக்கோயில் சித்திரவேலாயுதர் ஆலயம் (2) சித்தாண்டி முருகன் ஆலயம்
(3) மாமாங்கப் பிள்ளையார் ஆலயம் (4) களுதாவளைப் பிள்ளையார் ஆலயம்

25. சிவபெருமானிடத்தில் படிக்காசு பெற்றோர்,
(1) சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர். (2) சம்பந்தர், அப்பர் ஆகியோர்.
(3) காரைக்காலம்மையார், இசைஞானியார் ஆகியோர். (4) பூசலார், திருமூலர் ஆகியோர்.

26. சித்தாந்த அட்டகத்தை இயற்றிய உமாபதி சிவாச்சாரியார்,
(1) அகச்சந்தான குரவர் ஆவார். (2) புறச்சந்தான குரவர் ஆவார்.
(3) பண்டாரசாத்திரம் இயற்றியவர் ஆவார். (4) திருவாரூரில் பிறந்தவர் ஆவார்.

27. தன்மாத்திரைகள் எனப்படுபவை,
(1) மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன. (2) சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன.
(3) நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன. (4) மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன.

28. சிவபக்தியையும் சிவனது வீரதீரச்செயல்கள், அருட்திறன், தனித்துவம், மேன்மை என்பவற்றையும் புலப்படுத்துவது,
(1) வேதங்கள் (2) நாலாயிரத்திவ்யப்பிரபந்தம்
(3) புராண இதிகாசக் கதைகள் (4) அரிச்சந்திர புராணம்

29. திருப்பாவை விரதம் மார்கழி மாதத்தில்,
(1) அம்பாளை நோக்கி அனுட்டிக்கும் விரதமாகும்.
(2) மகாவிஷ்ணுவை நோக்கி அனுட்டிக்கும் விரதமாகும்.
(3) முருகனை நோக்கி அனுட்டிக்கும் விரதமாகும்.
(4) விநாயகரை நோக்கி அனுட்டிக்கும் விரதமாகும்.

30. உலகந்தழுவிய சைவக் கொள்கையை விளக்கி நிற்கும் வாசகம்,
(1) ஒரு பொல்லாப்புமில்லை. (2) இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க.
(3) ஆலயம் தொழுவது சாலவும் நன்று. (4) திண்ணிய நெஞ்சம் வேண்டும்.

The National e-learning Portal for The General Education

31. உழவன் தனது தொழிலை ஆரம்பிக்கும்போது முதன்முதலாக மேற்கொள்வது,
(1) ஏர்மங்கலச் சடங்கு (2) முளைப்புச் சடங்கு
(3) பொலிச் சடங்கு (4) ஆயுத பூசை

32. பெரியபுராணத்திற்கு முதல் நூலாகவும் வழி நூலாகவும் விளங்குவன,
(1) திருப்பாவை, திருவெம்பாவை (2) திருவிசைப்பா, திருப்பல்லாண்டு
(3) திருத்தொண்டத்தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி (4) திருவாசகம், திருக்கோவையார்

33. சுந்தரமூர்த்தி நாயனாரின் பெற்றோர்,
(1) சம்புபாதாசிரியார், சிவஞானவதியார் (2) புகழனார், மாதினியார்
(3) சடையனார், இசைஞானியார் (4) சிவபாதவிருதயர், பகவதியார்

34. திருவாரூரில் குளம் தோண்டும் பணியைச் செய்து தூய்மையான நீர் கிடைக்க வழி செய்தவர்,
(1) முருக நாயனார் (2) தண்டியடிகள்
(3) சிறுத்தொண்டர் (4) அப்பூதியடிகள்

35. சூரியன் உதித்தபின் ஏழரை நாழிகைக்குள் நடைபெறும் பூசை,
(1) உச்சிக்காலப் பூசை (2) காலைச்சந்திப் பூசை
(3) சாயரட்சைப் பூசை (4) உஷக்காலப் பூசை

36. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பூம்பாவையை உயிர்ப்பிப்பதற்காக அருளிய தேவாரப் பதிகப்பாடல்,
(1) சடையாயெனுமால்... (2) மட்டிட்ட புன்னை...
(3) சொற்றுணை வேதியன்... (4) துணிவளர் திங்கள்...

37. மாதர்மடப்பிடியும்... என்ற தேவாரப்பதிகப் பாடலின் பண்,
(1) தக்கேசி (2) யாழ்முரி
(3) நட்டபாடை (4) காந்தார பஞ்சமம்

[பக். 4 ஐப் பார்க்க

50085

38. மாணிக்கவாசகர் முத்தியடைந்த தினம்,
(1) ஆனிமகம்
(2) சித்திரைச் சதயம்
(3) ஆடிச்சோதி
(4) வைகாசி மூலம்

● பின்வரும் அட்டவணையில் A இலிருந்து I வரையிலான தகவல்களின் உதவியுடன் **39**ஆம் **40**ஆம் வினாக்களுக்கான விடைகளைத் தெரிவுசெய்க.

| சந்தானகுரவர் | அவதரித்த இடம் | நூல்கள் |
|---|---|---|
| A - மெய்கண்டதேவர் | D - திருப்பெண்ணாகடம் | G - சிவஞானசித்தியார் |
| B - அருணந்தி சிவாசாரியார் | E - கொற்றவன்குடி | H - சிவஞானபோதம் |
| C - உமாபதி சிவாசாரியார் | F - திருத்துறையூர் | I - கொடிக்கவி |

39. புறச்சந்தான குரவர்களுள் முதல்வராகத் திகழ்பவருடன் தொடர்புடைய தொகுதி,
(1) A D H (2) A E I (3) B F G (4) C D H

40. சிதம்பரத் திருத்தலத்தோடு சம்பந்தப்பட்ட சந்தான குரவருடன் தொடர்புடைய தொகுதி,
(1) A D H (2) B D G (3) B F H (4) C E I

* *

The National e-learning Portal for The General Education

[பக். 5 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

12 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2014 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2014 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2014

ශෛවනෙරි I, II
**சைவநெறி I, II**
Saivaneri I, II

## சைவநெறி II

* ✻ **முதலாம்** வினாவும் **இரண்டாம்** வினாவும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* ✻ முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் இரண்டாம் வினாவின் விடைக்கு **16** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **8** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** மேல்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) வீட்டில் இடம்பெறும் நாளாந்த சமயக் கடமைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(ii) மனிதநேயப் பண்புகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(iii) சந்தான குரவர்கள் **நால்வரின்** பெயர்களைக் குறிப்பிடுக.

(iv) பூர்வக் கிரியைகள் **இரண்டினைத்** தருக.

(v) "தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்."

- திருவருட்பயன் -

இதில் வரும் 'சத்தி பின்னமிலான்' என்பதன் பொருள் யாது ?

(vi) ஆணவ மலத்திற்குரிய மறுபெயர்கள் **இரண்டினைத்** தருக.

(vii) 'ஏடவிழ் அலங்கல் மார்பான்...' எனும் பாடலில் சிறப்பிக்கப்படும் கடவுள் யார் ?

(viii) குமரகுருபரர் இயற்றிய நூல்கள் **இரண்டினை** எழுதுக.

(ix) கிராமிய வழிபாட்டு முறையில் அம்மன் வழிபாட்டின் நோக்கங்கள் **இரண்டினை** எழுதுக.

(x) அபிராமிப்பட்டரின் இயற்பெயர் என்ன ? அவர் அருளிய நூலொன்றினைக் குறிப்பிடுக.

**2.** (i) மேல்வரும் பாடல்களுள் **இரண்டினை** அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.

(ii) அவற்றின் பொழிப்புரையை எழுதுக.

(அ) "திருவேயென் செல்வமே..."

(ஆ) "இடரினுந் தளரினும்..."

(இ) "மூவரென இருவரென..."

(ஈ) "கோல மால்வரை..."

(உ) "தந்ததுன் றன்னைக்..."

**3.** "சைவ விரதங்களால் ஆன்மீகரீதியில் மட்டுமன்றி, விஞ்ஞானரீதியிலும் பயன்கள் விளைகின்றன."

(i) விரதம் குறித்து ஆறுமுகநாவலர் பெருமான் எழுதியுள்ள மேற்கோளைத் தருக.

(ii) சைவ விரதங்கள் தொடர்பான விஞ்ஞான விளக்கங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(iii) சைவ விரதங்களின் ஆன்மீகப் பயன்கள் **நான்கினைச்** சுருக்கமாக விளக்குக.

[பக். 6 ஐப் பார்க்க

**4.** "என் கடன் பணிசெய்து கிடப்பதே." - திருநாவுக்கரசர் -

(i) திருநாவுக்கரசு நாயனார் 'உழவாரப் படையாளி' என அழைக்கப்படக் காரணம் என்ன ?

(ii) திருநாவுக்கரசு நாயனாரின் சமூகப் பணிகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(iii) திருநாவுக்கரசு நாயனார் செய்த சமய சமூகப் பணிகளை அறிவதனால் ஏற்படும் நன்மைகள் **நான்கினைச்** சுருக்கமாக விளக்குக.

**5.** "அருவும் உருவும் அறிஞர்க் கறிவாம்
உருவும் உடையான் உளன்."

- திருவருட்பயன் -

(i) அருவத் திருமேனிகள் யாவை ?

(ii) அருவுருவத் திருமேனியின் வடிவம் எவ்வாறு அமைந்திருக்கும் ?

(iii) உருவத்திருமேனி பற்றிச் சுருக்கமாக விளக்குக.

**6.** வரலாற்று பிரசித்தி பெற்ற பல சிவத்தலங்கள் இலங்கையில் அமைந்துள்ளன.

(i) பாலாவித் தீர்த்தச் சிறப்புப் பற்றி சுந்தரமூர்த்தி நாயனார் குறிப்பிடும் தேவார வரிகள் **மூன்றினைத்** தருக.

(ii) திருக்கேதீச்சரத் தலத்தின் மூர்த்திச் சிறப்பினையும் அத்தலத்தின் மீது தேவாரப் பதிகங்கள் பாடிய **இருவரின்** பெயர்களையும் குறிப்பிடுக.

(iii) பொன்னம்பலவாணேச்சரம் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

**7.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) கேதாரகௌரி விரதம்

(ii) சைவ சமய வாழ்வு

(iii) சைவ நாற்பாதங்கள்

(iv) கடையிற் சுவாமிகள்

(v) நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம்

The National e-learning Portal for The General Education

***